<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, கோயம்புத்தூர்.</u>

**முன்னிலை:- திருமதி.E.வெர்ஜின் வெஸ்டா, B.A, M.L, MBA.,**
**நீதித்துறை நடுவர் எண்.V**
**கோயம்புத்தூர்.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 547/2023**
**CNR.NO.TNCBOA-009473-2023**
**2026 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 29 ஆம் நாள்**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
B-1, கடைவீதி காவல் நிலையம்,
கோயம்புத்தூர் மாவட்டம்
குற்ற எண் 347/2022 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. செந்தில் (எ) ஜப்பான் (வயது 47/2026),
த/பெ. விஸ்வநாதன்,
க.எண். 94, L.G. தோட்டம்,
கெம்பட்டி காலனி,
உக்கடம், கோயம்புத்தூர்.

2. ஆறுமுகம் (வயது 42/2026),
த/பெ. வேலுச்சாமி,
க.எண். 61, பட்டக்கார அய்யாசாமி கோவில் வீதி,
துரை வீதி, உக்கடம்,
கோயம்புத்தூர். ... 1 மற்றும் 2 எதிரிகள்

## வழக்கு விசாரணை விவரங்கள்

**(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No.814/2020/RG/F1 (P.Dis.No.36/2021), நாள்: 07.04.2021-ன் படி)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில்இருந்த காலம் | : | எதிரிகளின் பெயர்கள் | கைது செய்யப்பட்ட தேதி | பிணையில் சென்ற தேதி |
| | | | 1. செந்தில் (எ) ஜப்பான் (வயது 47/2026), த/பெ. விஸ்வநாதன், க.எண். 94, L.G. தோட்டம், கெம்பட்டி காலனி, உக்கடம், கோயம்புத்தூர். | 08.11.2022 | 12.11.2022 |
| | | | 2. ஆறுமுகம் (வயது 42/2026), த/பெ. வேலுச்சாமி, க.எண். 61, பட்டக்கார அய்யாசாமி கோவில் வீதி, துரை வீதி, உக்கடம், கோயம்புத்தூர். | 08.11.2022 | 12.11.2022 |

| | | | |
|---|---|---|---|
| 2. | புகார் /இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 07.11.2022 / 17.02.2023 |
| 3. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| 4. | 240 கு.வி.மு.ச.பிரிவு/BNSS 351 இன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி : | : | கு.வி.மு.ச.பிரிவு 240 இன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி 30.10.2024 |
| 5. | கு.வி.மு.ச. பிரிவு 317 / BNS 355 -ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர மற்றும் குற்றவியல் பல்வகை | : | அரசு தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 311 இன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் பல்வகை மனு எண் 1/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மனுக்கல் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | | | | |
| 6. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் : | : | அரசு தரப்பு சாட்சி | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 03.08.2026 | இல்லை |
| | | | அ.சா.2 | 04.08.2026 | இல்லை |
| | | | அ.சா.3 | 04.08.2026 | இல்லை |
| | | | அ.சா.4 | 04.08.2026 | 04.08.2026 |
| 7. | 313 (1) (b) Cr.P.C/BNSS பிரிவு 351 இன்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி: | : | 10.08.2026 | | |
| 8. | குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமறைவான தேதி, பிடிபட்ட /ஆஜரான தேதி | : | இல்லை | | |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் : | : | இல்லை | | |

இந்த வழக்கு 01.3.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10.08.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமிகு. M. ஷீரின் சித்தாரா ஸ்வீட்டி அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. முருகவேல்

அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது கோயம்புத்தூர் மாவட்டம், B-1, கடைவீதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2) இன் கீழ் 17.02.2023 ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் மீது 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2) இன் கீழான குற்றச்சாட்டுகளுக்காக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது ஆகும்.

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

2.1. கடந்த 06.11.2022 ஆம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு B-1, கடைவீதி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட கோவை L.G தோட்டம் பள்ளி வாசல் அருகில் உள்ள 1ம் எதிரி செந்தில் பட்டறையில் வைத்து வாதி குமரேசன் சம்பள பணத்தை கேட்டபோது, 1ம் எதிரி அவரது பட்டறையில் வேலை செய்யும் 2 ம் எதிரியுடன் சேர்ந்து வாய்தகராறு செய்தும், தனது கொரடை கொடு என்று வாதி கேட்டதற்கு கொடுக்க முடியாது நீ வெளியே போ என்று கையால் அடித்து வெளியே தள்ளிவிட்டும், தனது கொரடை வாதி எடுக்க சென்றபோது 1ம் எதிரி ரீப்பர் கட்டையால் தலையில் பலமாக தாக்கி வாதியின் இடது பக்கத்தில் ரத்த காயம் ஏற்படுத்தியும், 2ம் எதிரி ரீப்பர் கட்டையால் தாக்கி இடது தோலிலும், முதுகிலும் காயம் ஏற்படுத்தியும், வாதியைப் பார்த்து 1 மற்றும் 2 எதிரிகள் ரீப்பர் கட்டையை உயர்த்தி காட்டி நீ இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளனர்.

**2.2.** மேற்கண்ட செயல்கள் குறித்து வாதி குமரேசன் கொடுத்த புகாரின் பேரில் எதிரிகள் மீது 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2)-இன் கீழ் குற்ற எண் 347/2022 என்ற எண்ணில் 07.11.2022 ஆம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் B-1,

கடைவீதி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173(2) இன் கீழ் இறுதி அறிக்கை 17.02.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட குற்ற இறுதி அறிக்கையினை பரிசீலனை செய்து கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b) இன் படி இந்த வழக்கு ஆண்டு பட்டிகை வழக்கு எண் 547/2023 ஆக 01.03.2023 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது. எதிரிகள் முன்னிலையானவுடன் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி 21.10.2024 ஆம் தேதி 1 மற்றும் 2 எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து பார்த்த போது, எதிரிகள் குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால், 30.10.2024 ஆம் தேதி 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2)-இன் கீழான குற்றச் செயல்கள் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு, குற்றச்சாட்டு குறித்து தமிழில் விளக்கி வினவிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்றும் வழக்கு விசாரணை வேண்டும் என்றும் கூறினர். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. 1 மற்றும் 2 எதிரிகள் 08.11.2022 ஆம் தேதி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்குட்படுத்தப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றக் குற்றப்பல்வகை மனு எண் 38020/2022, நாள் 11.11.2022 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் சென்றுள்ளார்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையான சான்றாவணங்கள் மற்றும் அ.சா.பொ.1, அ.சா.பொ.2 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்** :

**7.1.** அ.சா.1 திரு. ரவி தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரர் தனக்கு மாமா என்றும், அவர் தற்போது இறந்துவிட்டதாகவும், எதிரிகள் தனது உறவினர்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தனது மாமா குமரேசனை சிலர் அடித்ததாக அன்றைய தினம் இரவு தான் வேலை முடித்து வீட்டிற்கு வந்த போது தன்னிடம் அங்கிருந்தவர்கள் சொன்னதாகவும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7.2.** அ.சா.2 திரு. பிரகாசன் தனது சாட்சியத்தில் எதிரிகள் தனது கடைக்கு பொருள் வாங்க வருபவர்கள் என்ற முறையில் தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றிலுள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது என்றும், போலீசார் தன்னை அழைத்து சாட்சி கையொப்பம் செய்ய சொன்னதன் பேரில் தான் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**7.3.** அ.சா.3 திரு. நாராயணன் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றிலுள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையது என்றும், போலீசார் தன்னை அழைத்து சாட்சி கையொப்பம் செய்ய சொன்னதன் பேரில் தான் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**7.4.** அ.சா.4 திரு. சாந்தகுமார் தனது சாட்சியத்தில் இவ்வழக்கில் தான் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளிப்பதாகவும், கடந்த 07.11.2022 ஆம் தேதியன்று தலைமைக் காவலர் திரு. அருண்குமார் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, கோவை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர் குமரேசன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், வழக்கு கோப்புகளை ஆய்வாளர் திருமதி. கோமதி அவர்களின் பார்வைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிரகாசம் மற்றும் நாராயணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயாரித்தும், சாட்சிகளை விசாரித்து கையொப்பம் பெற்றும்,

எதிரிகள், புகார்தாரரை தாக்க பயன்படுத்திய சுமார் 2 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை ஒன்று மற்றும் 2 ¼ அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், எதிரிகளை 08.11.2022 ஆம் தேதியன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், புகார்தாரருக்கு சிசிக்சை அளித்த மருத்துவர் திரு.சீனிவாசன் அவர்களை விசாரித்து புகார்தாரரின் விபத்து பதிவேடு பெற்றும், அவரது விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) இன் கீழ் எதிரிகளிடம் 10.08.2026 அன்று விளக்கப்பட்டது. எதிரிகள் பொய் வழக்கு என்று தெரிவித்தனர். மேலும், தனது தரப்பில் சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**9. தீர்வுக்குரிய பிரச்சனை:**

1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2)-இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை.

**10. தீர்வு:**

**10.1.** வழக்கு சம்பவத்தினை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அ.சா.1 திரு. ரவி தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புகார்தாரர் தனக்கு மாமா என்றும், அவர் தற்போது இறந்துவிட்டதாகவும், எதிரிகள் தனது உறவினர்கள் என்றும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தனது மாமா குமரேசனை சிலர் அடித்ததாக அன்றைய தினம் இரவு தான் வேலை முடித்து வீட்டிற்கு வந்த போது தன்னிடம் அங்கிருந்தவர்கள் சொன்னதாகவும், வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.2.** இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜரில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக அரசு தரப்பில் சொல்லப்படும் சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியங்களில் எதிரிகளை தங்களுக்கு தெரியும் என்றும், இந்த வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றிலுள்ள முதலாவது மற்றும் இரண்டாவது கையொப்பங்கள் தங்களுடையது என்றும், போலீசார் தங்களை அழைத்து சாட்சி கையொப்பம் செய்ய சொன்னதன் பேரில் தாங்கள் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**0.3.** மேலும் வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சாட்சியாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பட்டியல் சாட்சி திரு. குமரேசன் என்பவர் கடந்த 28.03.2025 ஆம் தேதியன்று இறந்துவிட்டதாக அரசு தரப்பால் தெரிவிக்கப்பட்டு, இறப்பு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு அவரது சாட்சியமானது இந்நீதிமன்றத்தால் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.

**10.4.** இவ்வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 திரு. ரவி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.2 திரு. பிரகாசன், அ.சா.3 நாராயணன் ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத சூழ்நிலையில், அரசு தரப்பில் அவர்கள் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போதிலும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்வித சாட்சியமும் பெறப்படவில்லை.

**10.5.** இவ்வழக்கின் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள உதவி ஆய்வாளரான அ.சா.4 திரு. சாந்தகுமார் தனது சாட்சியத்தில் தலைமைக் காவலர் திரு. அருண்குமார் புகார்தாரரான குமரேசனிடமிருந்து புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திருமதி. கோமதி மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், வழக்கு சொத்துக்களை சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றி

படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது குறித்தும், எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், புகார்தாரரான குமரேசனுக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றது குறித்தும், எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.6.** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான திரு. குமரேசன் இறந்து விட்டபடியால் அரசுத் தரப்பில் சாட்சியாக விசாரிக்க முடியாத நிலையிலும், மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ள நிலையிலும், புகார்தாரர் குமரேசனை எதிரிகள் ரீப்பர் கட்டைகளால் தாக்கி இரத்தக்காயத்தை விளைவித்தனர் என்பது நிரூபிக்கப்படவில்லை.

**10.7.** மேலும், இவ்வழக்கில் முக்கிய சாட்சியான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களானது அரசு தரப்பு வழக்கிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவில்லையென்பதால் காயம்பட்ட புகார்தாரரான சசிக்குமாருக்கு சிகிச்சையளித்து விபத்து பதிவேடு வழங்கிய பட்டியல் சாட்சி மருத்துவர் திரு.சீனிவாசன் சாட்சியாக இவ்வழக்கில் அரசுத் தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளனர்.

**10.8.** இந்நிலையில் அ.சா.4 திரு. சாந்தகுமார் சாட்சியம் மூலமாக மட்டும் 1 மற்றும் 2 எதிரிகள் கடந்த 06.11.2022 ஆம் தேதி வாதி குமரேசனை ரீப்பர் கட்டைகளால் தாக்கி இரத்தக்காயத்தை ஏற்படுத்தி, வாதிக்கு குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தனர் என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலாது.

**10.9.** எனவே, 1 மற்றும் 2 எதிரிகளுக்கு எதிராக 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2)-இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சந்தேகத்தின் பலனை 1 மற்றும் 2 எதிரிகளுக்கு ஆதரவாக

வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்றும் இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11.** இறுதியாக, 1 மற்றும் 2 எதிரிகள் 1860 ஆம் ஆண்டின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 323, 324 மற்றும் 506(2)-இன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**12.** இவ்வழக்கில் P.R. No. 654/2022, நாள் 02.12.2022 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குச் சொத்துக்களான 2 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை மற்றும் 2 ¼ அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை ஆகியவற்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழித்து விட கு.வி.மு.ச. பிரிவு 452-இன் கீழ் உத்தரவிடப்படுகிறது. 1 மற்றும் 2 எதிரிகள் மற்றும் அவர்களின் பிணையதாரர்களின் பிணைய பத்திரமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

E VIRGIN VESTA
Digitally signed by E VIRGIN VESTA
Date: 2026.08.14 20:10:58 +0530

நீதித்துறை நடுவர் எண். 5,

கோயம்புத்தூர்.

**அட்டவணை :**

**அரசு தரப்பு சாட்சிகள்** :

| சாட்சி எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | முதல் விசாரணை செய்த தேதி | குறுக்கு விசாரணை செய்த தேதி |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | திரு. ரவி | 03.08.2026 | இல்லை |
| அ.சா.2 | திரு. பிரகாசன் | 04.08.2026 | இல்லை |
| அ.சா.3 | திரு. நாராயணன் | 04.08.2026 | இல்லை |
| அ.சா.4 | திரு. சாந்தகுமார் | 04.08.2026 | 04.08.2026 |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | :- | பார்வை மகஜரிலுள்ள அ.சா.2-ன் 1 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | :- | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.2-ன் 1 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | :- | பார்வை மகஜரிலுள்ள அ.சா.3-ன் 2 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | :- | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.3-ன் 2 வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.5 | :- | புகார்வாக்குமூலம் |
| அ.சா.ஆ.6 | :- | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | :- | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.8 | :- | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.9 | :- | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.10 | :- | படிவம் 91 |
| அ.சா.ஆ.11 | :- | விபத்து பதிவேடு |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** :

அ.சா.பொ.1 - 2 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை ஒன்று

அ.சா.பொ.2 - 2 ¼ அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை ஒன்று

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு சாட்சிகள்** : இல்லை

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**பின்குறிப்பு :-**

1. வழக்கு விசாரணையின் போது 1 மற்றும் 2 எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. முடிவில் 1 மற்றும் 2 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.
5. வழக்கு சொத்து பற்றிய உத்தரவு வழக்கு சொத்து பதிவேட்டில் பதியப்பட்டது.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2026.08.14 20:11:05 +0530

நீதித்துறை நடுவர் எண். 5,

கோயம்புத்தூர்.